# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு 2004/2005 (ஜனவரி/பெப்ரவரி 2006)

## ECO 1101 Economics Theory – Part - 01

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து முதலாம் வினாவின் பகுதிகளுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்கும, மூன்றாம் பகுதியிலிருந்து ஏதாவத இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

01. "சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் "நுகர்வோன் இறைமை" காணப்படுவதாக பெரும்பாலும் கூறப்படுகின்றது." இக்கூற்றினால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

02. வளங்களை ஒதுக்கீடு செய்யும் ஒரு வழி என்ற வகையில் விலைப்பொறிமுறையின் பிரதான குறைபாடுகள் எவை?

03. ஓர் உற்பத்திச் சாத்திய எல்லையின் வடிவத்தினை அல்லது சாய்வினை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை:.

04. உற்பத்திச் சாத்திய எல்லை அருமைத் தன்மையை எவ்வாறு விளக்குகிறது?

05. உற்பத்திக் காரணி ஒன்றுக்கான கேள்வி, நுகர்வுப் பொருள் ஒன்றுக்கான கேள்வியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.

06. நுகர்வோன் மிகையையும் உற்பத்தியாளன் மிகையையும் வரைபடமூலம் வேறுபடுத்துக.

07. மொத்தப் பயன்பாட்டினையும் எல்லைப் பயன்பாட்டினையும் வேறுபடுத்துக.

08. குறைந்து செல்லும் விளைவு விதி தொழிற்படக்காரணம் யாது?

09. ஒரு நிறைபோட்டிச் சந்தையில் உள்ள நிறுவனம் ஏன் விலையை ஏற்போனாக தொழிற்படுகின்றன.

10. எல்லை வருமானம் என்பதனால் கருதப்படுவது யாது?

(30 புள்ளிகள்)

## பகுதி – II

எவையேனும் இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (அ) "அமையச் செலவு" என்ற பதத்தினால் நீர் கருதிக்கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) கலப்புப் பொருளாதாரம் ஒன்றின் சிறப்பு இயல்புகள் யாவை?

(05 புள்ளிகள்)

(இ) நிலை மாற்றப் பொருளாதாரங்கள் (Transition Economics) என்றால் என்ன? என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

02. (அ) "நுகர்வோன் சமநிலை" என்றால் என்ன? என்பதை விளக்குக?

(05 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் தரவுகள் ஒரு நுகர்வோன் கேக் துண்டுகளையும், தேநீரையும் நுகர்வதன் மூலம் பெறும் எல்லைப் பயன்பாடுகளைக் குறிக்கின்றது. ஒரு துண்டு கேக், ஒரு கோப்பை தேநீர் என்பவற்றின் விலைகள் முறையே 4 ரூபா, 2 ரூபா, ஆகும். இதேவேளை இந்நுகர்வோனது நாளாந்த வருமானம் 26 ரூபா ஆக அமைகின்றது.

| அலகு | எல்லைப்பயன் (கேக்) | எல்லைப்பயன் (தேநீர்) |
|---|---|---|
| 1 | 280 | 360 |
| 2 | 240 | 360 |
| 3 | 230 | 240 |
| 4 | 160 | 160 |
| 5 | 100 | 80 |
| 6 | 50 | 50 |
| 7 | 10 | 05 |

மேற்படி தரவுகளைக் கையாண்டு

(i) இந்நுகர்வோன் தனது திருப்தியை உச்சப்படுத்துவதற்கு கேக் துண்டுகள், தேநீர் என்பவற்றை எந்தளவு கொள்வனவு செய்ய வேண்டும் என்பதனை நிர்ணயிக்குக.

(05 புள்ளிகள்)

(ii) நுகர்வோனது வருமானம் 42 ரூபாவாக அதிகரிக்குமாயின், தனது திருப்தியினை உச்சப்படுத்துவதற்கு அவன் நுகர வேண்டிய பொருட் சேர்க்கையினை நிர்ணயிக்குக.

(05 புள்ளிகள்)

(iii) மேலேயுள்ள வினா (i), (ii) ஆகியவற்றுக்கான உமது விடைகளைப் பயன்படுத்தி கேக் துண்டு, தேநீர் ஆகிய இரண்டுக்குமான இந்நுகர்வோனின் வருமான நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக.

(05 புள்ளிகள்)

03. (அ) "சந்தைச் சமநிலை" என்ற பதத்தை எவ்வழிகளினூடாக விளக்கலாம் என்பதை அதன் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு தெளிவுபடுத்துக.

(05 புள்ளிகள்)

(ஆ) போட்டிச் சந்தை ஒன்றிலே விற்கப்படும் ஒரு பண்டத்திற்கான சந்தைக்கேள்வி, நிரம்பற் சார்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

$Qd = 20 - P$ (கேள்விச் சார்பு)

$Qs = -8 + 6P$ (நிரம்பற் சார்பு)

இத்தரவுகளைப் பயன்படுத்தி இப்பண்டத்தின் சமநிலை விலையையும் தொகையையும் நிர்ணயிக்குக.

(05 புள்ளிக்ள்)

(இ) "உச்ச விலையானது சந்தைச் சமநிலை விலையிலும் பார்க்க குறைவாக நிர்ணயிக்கப்படுவதனால், நுகர்வோருக்கு எப்போதும் நன்மையே பயக்கும்." இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? உமது விடையை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி – III

**ஏதேனும் ஒரு வினாவுக்கு மட்டும் விடை எழுதுக.**

01. "பொருளியல் என்பது இன்று ஒரு தனிப்பெருந்துறையாகவும் வளர்ந்துவரும் துறையாகவும் காணப்படுகின்றது." இந்நிலையில் பொருளியல் என்றால் என்ன? என்பதை பொருளியல் அறிஞர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை தெளிவுபடுத்துக?

(30 புள்ளிகள்)

02. உற்பத்திச் சாத்திய எல்லையானது பொருளியல் கோட்பாட்டு ஆய்வில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றமைக்கான அடிப்படைக் காரணங்களைத் தெளிவுபடுத்தும் வரைபடங்களுடன் விரிவாக விளக்குக.

(30 புள்ளிகள்)

*********